இணைப்பு—VII

(241ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண்—29

சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு

(சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

அறிவிப்புகள் 2010—2011

1. புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசலில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை, உடை மாற்றும் அறை, பொருட்கள் வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகன நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச் சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.100 இலட்சம் வழங்கப்படும்.

2. திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை, உடை மாற்றும் அறை, பொருட்கள் வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகன நிறுத்துமிடம், வாகனம் பழுதுபார்க்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச் சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.100 இலட்சம் வழங்கப்படும்.

3. திருநெல்வேலி மாவட்டம் குத்தர பாஞ்சான் அருவிப்பகுதி மேம்பாடு

திருநெல்வேலி மாவட்டம் குத்தர பாஞ்சான் அருவிப் பகுதியின் கட்டமைப்பு வசதிகள் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவு கவரும் பொருட்டு மேம்படுத்தப்படும்.

4. திருவண்ணாமலையில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல்

அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்பாடு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் சுற்றுலா மேம்பாட்டு வசதிகள்

செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா முக்கியத்துவம் கருதி சுற்றுலா அலுவலகம் ஒன்று திருவண்ணாமலையில் செயல்பட்டு வருகிறது. மேலும் மாதந்தோறும் பௌர்ணமி அன்று அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் திருவண்ணாமலை கிரிவலத்திற்கு வந்து செல்கின்றனர். அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் திருவண்ணாமலையில் உள்ள ரமணர் ஆசிரமம், ஜவ்வாதுமலை, சாத்தனூர் ஆகிய இடங்களுக்கு வந்து செல்கின்றனர். சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி திருவண்ணாமலையில் சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்று ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கலை பண்பாட்டுத் துறை

1. சர்வர் மற்றும் கணினிகள் வாங்குதல்

கலை பண்பாட்டு இயக்கக கணினிகளை ஒருங்கிணைத்து, தகவல்கள், கோப்புகள், அறிக்கைகளை சேமித்து பாதுகாக்க சர்வர் ஒன்றும் கணினிகளும் ரூ.2.25 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

2. மண்டலக் கலை பண்பாட்டு மையங்களுக்கு கணினி மற்றும் லேசர் அச்சுப் பொறிகள் வாங்குதல்.

ஆறு மண்டலக் கலை பண்பாட்டு மையங்களுக்கு, மையத்திற்கு ஒரு கணினி, ஒரு லேசர் பிரின்டர் வீதம் ரூ.3 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

3. மாவட்ட இசைப் பள்ளிகளுக்கு வயலின் மற்றும் மிருதங்கத்துக்கான பாடத் திட்ட நூல்கள் அச்சிடுதல்

கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் புதியதாக துவங்கப்பட்ட வயலின் மிருதங்கம் ஆகிய பிரிவுகளுக்கு பாடத் திட்ட நூல்கள் ரூ.1 இலட்சம் செலவில் அச்சிடப்படும்.

4. மாவட்ட இசைப் பள்ளிகளுக்கு புள்ளி வரிசை அச்சுப் பொறிகள் வாங்குதல்.

17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு சம்பளப் பட்டியல்கள் மற்றும் விரிவான அறிக்கைகள் தயாரிக்கும் பணிகளுக்காக டாட்மேட்ரிக்ஸ் பிரின்டர்கள் ரூ.2.55 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

2010 மே 11]

5. திருவையாறு, அரசு இசைக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், குடில் அமைத்தல், கழிவறைகள் மற்றும் முதல் தளம் கட்டுதல்.

சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் திருவையாறு, அரசு இசைக் கல்லூரிக்கு முதல் தளம், மாணவர்கள் பயில குடில்கள், சுற்றுப்புறச்சுவர், கழிவறைகள் ஆகியன ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்படும்.

6. மதுரை அரசு இசைக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்.

மதுரை அரசு இசைக் கல்லூரியின் சொத்துக்களைப் பாதுககாக்க சுற்றுப்புறச்சுவர் ரூ.15 இலட்சம் செலவில் கட்டப்படும்.

7. சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள தாகூர் கலையரங்கில் இருக்கை வசதிகள் ஏற்படுத்துதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள தாகூர் கலையரங்கத்திற்கு 300 இருக்கைகள் ரூ. 1.20 இலட்சம் செலவில்வாங்கப்படும்.

8. சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள தாகூர் கலையரங்கை சீர்படுத்துதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரிவளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதால் இக்கலையரங்கின் முன்புறம் ரூ. 2 இலட்சம் செலவில் அழகுடன் மேம்படுத்தப்படும்.

9. சென்னை அரசு இசைக் கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்குதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியின் பயன்பாட்டிற்கு ரூ. 1 இலட்சம் செலவில் புதிய அறைகலன்கள் வாங்கப்படும்.

10. அரசு இசைக் கல்லூரிகளுக்கு நிகரி இயந்திரங்கள் வாங்குதல்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறில் செயல்படும் அரசு இசைக் கல்லூரிகளுக்கு தகவல் பரிமாற்றம் கருதி நிகரி இயந்திரங்கள் ரூ. 0.50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

11. அரசு கவின் கலைக் கல்லூரிகளுக்குகணினிகள் வாங்குதல்.

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சிப் பாடங்கள் கணினி வழி கற்பித்திட கணினிகள் மற்றும் உபகரணங்கள் ரூ. 5 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

[2010 மே 11

12. அரசு கவின் கலைக் கல்லூரிக்குஅச்சு இயந்திரம் வாங்குதல்.

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பதிப்போவியத் துறையின் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அச்சு இயந்திரம் ரூ. 4 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

13. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிக்கு மேசை நெசவு இயந்திரம் வாங்குதல்.

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் துகிலியல் துறையில் பயிலும் மாணவர்கள் பயன்பாட்டிற்கு நெசவு இயந்திரங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்பட, புதிய மேசை நெசவு இயந்திரம் ரூ. 0.75 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

14. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு புதிதாக மின் சூட்டடுப்பு ரூ. 6.65 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி சுடுமண் துறையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க சூட்டடுப்பு ரூ. 6.65 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

15. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிக்கு படத்தொகுப்புக் கருவிகளுடன் வீடியோ யு. மேட்டிக் ஒளிப்படக் கருவிகள் வாங்குதல்.

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் காட்சித் தொடர்பு வடிவமைப்புத் துறை மற்றும் இதர துறைகளில் பயில்ும் மாணவர்களின் திறனை மேம்படுத்திடவும், பயிற்சி வழங்கவும் இரண்டு வீடியோ யு. மேட்டிக் ஒளிப்படக் கருவி படத்தொகுப்பு உபகரணங்கள் ரூ. 6 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

16. கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ஆண்டொன்றுக்கு 500 கலைஞர்கள் கூடுதலாக தேர்வு செய்யப்பட்டு நிதி உதவி பெற்று வருகின்றனர். 2006 ஆம் ஆண்டு முதல் ரூ. 500/- ஆக இருந்த உதவித்தொகை ரூ. 1,000/- ஆக உயர்த்தப்பட்டது. 2010-11-ல் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு திங்கள்தோறும் ரூ. 1,000/- நிதி உதவி வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
WHAT IS TRUTH ALONE TRIUMPHS

2010 மே 11]

அருங்காட்சியங்கள் துறை

1. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பாலூட்டிகள் கூடத்தினைப் புதுப்பித்தல்.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பாலூட்டிகள் கூடம் ரூ. 10 இலட்சம் செலவில் புதுப்பித்து நவீனமாக்கப்படும்.

2. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வளர்கலை கூடத்தில் புதிய காட்சிப் பலகைக்ள் பொருத்துதல்.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வளர்கலை கூடத்தில் புதிய காட்சிப் பலகைகள் பொருத்தும் பணி ரூ. 2 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள தோட்டத்தினை மேம்படுத்துதல்.

சென்னை அருங்காட்சியக வளாகத்திலுள்ள தோட்டம் இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் ரூ. 4 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

4. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள படிமங்களுக்கு பாதுகாப்பு மேற்கொள்ளுதல்.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள தென்னிந்திய படிமங்களுக்கு தளவாடங்களுடன் வேதியப் பாதுகாப்பு ரூ. 3 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

5. சென்னை அருங்காட்சியகத்தில் புதிய வெளியீடுகள் வெளியிடுதல்.

சென்னை அருங்காட்சியகத்தின் பிரசித்தி பெற்ற நான்கு புதிய வெளியீடுகள் ரூ. 2 இலட்சம் செலவில் வெளியிடப்படும்.

6. திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் சிற்பப் பூங்கா அமைத்தல்.

திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ள தோட்டப் பகுதியில் ஒரு சிற்பப் பூங்கா ரூ. 1 இலட்சம் செலவில் அமைத்து முறையாக காட்சிப்படுத்தப்படும்.

7. விருதுநகர் அருங்காட்சியகத்தினை நவீனப்படுத்துதல்.

விருதுநகர் அருங்காட்சியகம் காட்சிப் பொருட்களின் பாதுகாப்பு கருதி, விளக்குகளுடனும், புதிய காட்சிப் பெட்டிகளுடனும் ரூ. 5 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

[2010 மே 11

தொல்லியல் துறை

1. தொல்லியல் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் சார் அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள், சர்வர், மடிக்கணினிகள் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்.

தொல்லியல் துறையின் சார் அலுவலகங்களுக்கு பதினான்கு கணினிகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு பன்னிரண்டு கணினிகள் ஆக மொத்தம் இருபத்தாறு கணினிகள் மற்றும் உபகரணங்கள், ஒரு சர்வர், மூன்று மடிக்கணினிகள் மற்றும் கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய சார் அலுவலகங்களுக்கு மூன்று நகல் எடுக்கும் இயந்திரங்கள் ரூ. 20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

2. தொல்லியல் துறையின் அச்சுப் பிரிவிற்கு அச்சிடும் இயந்திரம், புத்தகங்களை அழுத்தும் இயந்திரம் மற்றும் பின் அடிக்கும் இயந்திரம் வாங்குதல்

தொல்லியல் துறையின் அச்சுப் பிரிவிற்கு நான்கு அச்சிடும் இயந்திரங்கள், புத்தகங்களை அழுத்தும் இயந்திரம் மற்றும் பின் அடிக்கும் இயந்திரம் ரூ. 0.90 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

3. தொல்லியல் துறையில் கல்வெட்டு நூல்கள் அச்சிடுதல்

ஒரு கல்வெட்டு நூல், நான்கு மாணவர்கள் ஆய்வேடுகள், ஐந்து முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டு நூல்களை மறுபதிப்பு செய்தல், நான்கு அகழ்வைப்பக கையேடுகள், ஐந்து மாவட்ட அகழ்வைப்பக கையேடுகள் மற்றும் இரண்டு தொகுதிகளாக தொல்லியல் அகழாய்வு அறிக்கைகள் ஆகிய நூல்கள் ரூ. 10 இலட்சம் செலவில் அச்சிடப்படும்.

4. தொன்மைப் பொருட்களையும், பழமைச் சின்னங்களையும், நினைவுச் சின்னங்களையும் பாதுகாத்தல்.

சென்னை தலைமை அலுவலகம் மற்றும் மதுரை சார் அலுவலகங்களிலுள்ள இரசாயனப் பிரிவுகளுக்கு தொன்மை பொருட்களையும், நினைவுச் சின்னங்களையும் பாதுகாப்பதற்கான வேதியியல் திரவங்கள் ரூ. 1 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

5. தொல்லியல் துறை அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல்.

இராமநாதபுரம் சார் அலுவலகத்திற்கு இரண்டு இரும்பு அலமாரிகள், அகழ்வைப்பகங்களுக்கு 39 நிலை தாங்கி மின்விசிறிகள், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் சார் அலுவலகங்களுக்கு இரண்டு

2010 மே 11]

அவசரகால மின் விளக்குகள், மதுரை மற்றும் தஞ்சாவூர் சார் அலுவலகங்களுக்கு ஒவ்வொரு அலுவலகத்திற்கும் 25 நாற்காலிகள் வீதம் 50 நாற்காலிகள் மற்றும் சென்னை தலைமை அலுவலகத்திற்கு 60 நாற்காலிகள் ரூ. 1.60 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

6. அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதலும், அறிக்கைகள் வெளியிட்டு ஆவணங்களைப் பதிவு செய்தலும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தலச்சங்காடு என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, அகழாய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டு, ஆவணங்கள் பதிவு செய்யப்படும். எனவே, அகழாய்வுப் பணி மேற்கொள்ள இரண்டு ஜி.பி.எஸ் (G.P.S.) கருவிகளும், அகழாய்வாளர்கள் பயன்பாட்டிற்காக இரண்டு கேமரா, அகழாய்வுப் பிரிவுக்கு நவீன டிஜிடல் கேமரா மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள், ஒரு கணினி, ஸ்கேனர், பிரின்டர் மற்றும் ஒரு மடிக்கணினி ஆகியவை ரூ. 6.85 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

7. கல்வெட்டுகளைப் படியெடுப்பதற்கான சிறப்புத் திட்டம்.

கல்வெட்டுகளை வெளியிட கல்வெட்டுப் பயிற்சி பெற்று தற்போது வேலையில்லாத மாணவர்களைக் கொண்டு கல்வெட்டு படியெடுப்பதற்கான ஓராண்டு சிறப்புத் திட்டம் ரூ. 3.62 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

8. அருங்காட்சியங்களுக்கான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு செய்தல் தொடர்பாக மதுரை, தரங்கம்பாடி, மராட்டா அரண்மனை - தஞ்சாவூர் ஆகிய சார் அலுவலகங்களுக்கு மூன்று கண்காணிப்புக் கேமராக்கள், தஞ்சாவூர், இராமநாதபுரம், தரங்கம்பாடி ஆகிய சார் அலுவலகங்களுக்கு மூன்று நுழைவுச் சீட்டு வழங்கும் இயந்திரங்கள், மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரம், தரங்கம்பாடி ஆகிய சார் அலுவலகங்களுக்கு நான்கு மின்சாரம் சேமிக்கும் கருவிகள் வாங்குதல் மற்றும் கோயம்புத்தூர், தருமபுரி, கரூர் பூம்புகார், பூண்டி, இராமநாதபுரம் ஆகிய அகழ்வைப்பகங்களுக்கு காட்சிப் பெட்டி, விளக்குச் சீட்டு, காட்சிப் பொருட்களுக்கு ஒளி அமைப்பு உபகரணங்கள் பொருத்துதல் ஆகிய பணிகள் ரூ. 23.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS